## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 25-ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | அழகச்சி | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**25.6.2024 OS.No. 103/2019 வா.சா. 1** அழகச்சி **ஆஜர்**

**1,7,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் வாதியின் மகன் என்றால் சரிதான். வாதி மாயன் தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாதென்றால் தெரியும். வழக்கு விசாரணைக்கு பட்டியலிட்ட பின்பு தான் பவர் ஏஜெட்டாக நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் அனைத்து பிரதிவாதிகளிடம் இருந்து சொத்தை பிரித்து தரும் படி என் அப்பா மாயன் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எதன் அடிப்படையில் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கின் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள உறவுமுறையை காண்பிக்ககூடிய வம்சாவழி ஜாபிதாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து விபரத்தில் மொத்த சொத்துக்கும் சொத்து விபரம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் பாக அனுபவ சொத்திற்கும் நான்குமால் சொல்லியுள்ளோம். இந்த தாவா சொத்தில் வாதி மாயன் என்பவருக்கு உரிமையின் அடிப்படையில் பாக பிரிவினை கேட்கப்படுகிறதா அல்லது அனுபவ அடிப்படையில் கேட்கப்படுகிறதா என்றால் வாரிசு உரிமை அடிப்படையில் கேட்கப்பட்டுள்ளது.

2. இந்த வாரிசு உரிமைக்கு உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாரிசு என்பதற்கான அடிப்படை ஆவணங்கள் எங்களிடம் உள்ளது. நிருபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் அனுபவ பாத்தியமென்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் வாரிசு அடிப்படையில் எங்களுக்கு கிடைக்கபெற்ற சொத்தை அனுபவித்து வருவதால் தனி பாகமாக பிரித்து

கேட்கிறோம். தாவா சொத்திற்கு ஆதியில் உள்ள கூட்டு பட்டா 5 நபர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தற்பொழுது மேற்படி பட்டா 11 நபர்கள் பெயரில் உள்ளது. 11 நபர்கள் பெரியல் கூட்டு பட்டா உள்ளதாக பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த 11 நபர்களுக்கும் மொத்த சொத்தில் எவ்வளவு பாகம் உள்ளதென்று விபரத்தை வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 6 நபர்கள் கிரயம் பெற்ற நபர்கள் ஆவார்கள். அந்த 6 நபர்கள் கிரயம் பெற்ற விபரத்தையும் பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த 6 கிரயம் பெற்ற நபர்களையும் அவர்களின் இறந்த போன நபர்களின் வாரிசுகளையும் இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1,7,9 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

3. ராமன் அம்பலம் வகையறாவிற்கு 26.07.1968 ந் தேதி உ.க.கருப்பனன் அம்பலம் மகள் அய்யம்மாள் என்பவர் எழுதிவைத்த தானா செட்டில்மென்ட் படி தாவா சொத்து 1 ஏக்கர் ராமன் அம்பலம் வகைறயாவிற்கு பாத்தியம் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் அவர்களுக்கு பாகத்தின் படி கிடைக்கக் பெற்றது. அந்த 1 ஏக்கருடன் ராமன் அம்பலம் என்பருக்கு பூர்விகத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரனம் கிடைக்கப்பெற்றது என்றால் அவருக்கு பூர்விகமாக சொத்து கிடைக்கவில்லை. பூர்விகத்தின் அடிப்படையில் அவருக்கு சொத்து கிடைக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் பூர்விகத்தின் அடிப்படையில் அவருக்கு 24 செண்ட் கிடைக்க பெற்றது என்றால் சரியல்ல. இந்த ராமன் அம்பலம் வாரிசுகள் தான் இவ்வழக்கில் கண்ட 6 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். இந்த 6 முதல் 10 பிரதிவாதிகள்தான் இந்த தாவா சொத்தில் பாகாத்தின் படி கிடைக்கப்பெற்ற 24 செண்டில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. தானா செட்டில்மெண்டின் படி கிடைக்கக்பெற்ற பாகமான 1 ஏக்கரில் தான் 6 முதல் 10 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள்.

4. மொத்த சொத்தில் சில பாகஸ்தர்கள் சில நபர்களுக்கு விற்றதற்கான கிரய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.கருப்பையா பாகத்திற்கு கிடைத்த தாவா சொத்தில் அவரது வாரிசுகள் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடுகள் கட்டி 30,40 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். இந்த ராமன் அம்பலம் வாரிசுகள் தானா செட்டில்மெண்ட் படி கிடைக்கப்பெற்ற சொத்தில் வீடு கட்டி 40 வருடங்கள் இருக்கும் என்றால் சரியல்ல. 30 வருடங்கள் இருக்கும். ம.கருப்பையா மகன் பாண்டி

என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவரது மகள் ராக்கம்மா என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம். ராக்கம்மாளின் உடன் பிறந்த சகோதரி மருதாயி என்றால் சரிதான். ராக்கமாலுக்கு 3 ஆண் பிள்ளைகள், 2 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் 2 ஆண் பிள்ளைகளை 1,2 பிரதிவாதிகளாக சேர்த்துவிட்டு மீதி நபர்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் பெயரில் பட்டா இல்லை என்பதால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மருதாயிக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். மருதாயிக்கு கிடைத்த பாகத்தை அவர் யாருக்கு எழுதிவைத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியது என்றால் சரிதான். ம.கருப்பையாவின் உடன் பிறந்தவர் ம.மூக்கன் என்றால் எனக்கு தெரியாது. ம.மூக்கன் என்பவர் மகன் பாண்டி என்பவரை தெரியும். மேற்படி பாண்டிக்கு கருப்பு, மூக்காயி என்ற மக்களும் நாகமாக என்ற மனைவியும் இருந்து வருகிற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. ம.கருப்பையா என்பவருக்கு ம.மூக்கன் என்ற சகோதர்ர இருப்பதால் அவருக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரிதான். ம.கருப்பையா பாகத்தில் தான் பங்குண்டு. இந்த தாவா சொத்தில் கூட்டு பட்டாதாரிரல் ஒருவரான சின்னையன் அம்பலம் என்பருக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான். அவர் தான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதியவார். மேற்படி 3 ம் பிரதிவாதி 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் ஊரில் இருந்து வருகிறார்கள். மேற்படி வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சின்னையன் அம்பலம் மானாமதுரை கூடுதல் உரிமை நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்பந்தமாக OS 76-2012 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அவர் என்ன சொத்து விபரம் கொடுத்துள்ளார் என்றும் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6.OS 76-2012 என்ற வழக்கில் எனது தகப்பனார் மாயன் 17 வது பிரதிவாதியாக இருந்து வழக்கை நடத்தினார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கினுடைய தீர்ப்பின் நகல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பு நகல் என்னிடம் இருந்தும் அதை பற்றி இந்த தாவா வழக்கில் ஏன் குறிப்பிடவில்லை என்றால் இந்த வழக்கு எனது என் அப்பாவின் அனுபவ பாத்தியத்தை பிரிவினை செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் குறிப்பிடபடவில்லை. OS 76-2012 என்ற வழக்கு எந்த காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் 5 பெரும் பங்காளிகளுக்கும் பாகப் பிரிவினை

நடைபெறவில்லை என்றும் தாவா சொத்து கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாலும் கூட்டு சுவான்தார்ரகளுக்கு ஏதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உத்து கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு எதிராக தீர்ப்பு பகரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பின் பேரில் வாதிகள் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. OS 76-2012 என்ற வழக்கில் கோரப்பட்ட பரிகாரம் போன்றே இவ்வழக்கிலும் தாங்கள் அதே பரிகாரத்தை கோரியுள்ளதால் வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டின் படி தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தின் சொத்துக்கள் பொதுவில் உள்ளது என்றும் தனித்து பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் எங்களுக்கு அனுபவத்தில் இருப்பதாக சொல்லப்படும் சொத்து பற்றி தனியாக பிரித்து காண்பிக்கபடவில்லை என்றால் சரியல்ல. OS 76-2012 என்ற வழக்கில் தோல்வியுற்ற சின்னையன் அம்பலம் என்பவர் என்னை தூண்டிவிட்டு இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையான சொத்து விரபங்களை சொல்லாமல் கற்பணையான சொத்துவிபரங்களை சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் வீடின் மதிப்பு 15 லட்சம் என்றால் சரிதான். வீடு கட்டி 1 வருடம் ஆகிவிட்டதென்றால் 3 வருடம் ஆகீவிட்டது. இந்த வழக்கின் சொத்து விபரத்தில் வீடு கட்டி முடித்த விபரத்தை குறிப்பிட்டு பிராதையும் சொத்துவிபரத்தையும் திருத்தவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பிராதை திருத்தினால் வழக்கின் சொத்து மதிப்பு இந்நீதிமன்ற விசாரணை ஆள்வரைக்கு மேற்பட்டு வந்தவிடும்மென்பதால் பிராது திருத்த நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

**(2,3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.